ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2298/84 - 2022 සැප්තැම්බර් මස 24 වැනි සෙනසුරාදා - 2022.09.24
*2298/84 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரொஷான் ரணசிங்க (பா. உ),**
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2022, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி.*

**ஒழுங்குவிதிகள்**

*1986.01.20 ஆந் திகதிய 385/7A ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் வாயிலாகவும் அத்துடன் 2020.09.23 ஆந் திகதிய 2194/54 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் வாயிலாகவும் திருத்தஞ் செய்யப்பட்ட 1974 ஆம் ஆண்டு செத்தெம்பர் 20 ஆந் திகதிய 130 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1974 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுக்களில் பங்குபற்றுவோரை ஆளுகை செய்யும் கட்டளை கீழே காட்டப்பட்டுள்ளவாறு இவ்வண்ணம் மீண்டும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.*

1A - G 37616 — 08 (2022/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6அ. (அ) பொதுநலவாய நாடுகளுக்கு இடையேயான விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள் அத்துடன் அதற்கு ஒத்த தன்மை கொண்ட வேறு சர்வதேசப் போட்டிகளின் போது இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பங்குபற்றுவோரை தெரிவுசெய்தலானது விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படும் (இதனகத்துப் பின்னர் ''தேசிய விளையாட்டுத் தேர்வாளர் குழு'' என இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படும்) தேசிய விளையாட்டுத் தேர்வாளர் குழுவொன்றின் வாயிலாக விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களின் முன்கூட்டிய எழுத்துமூல அனுமதிக்குக் கீழானதாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ). தேசிய விளையாட்டுத் தேர்வாளர் குழு -

I. விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களின் அபிப்பிராயத்தின் பிரகாரம் விளையாட்டுக்களுக்கு சிறந்த சேவையொன்றினை ஆற்றியுள்ள அல்லது விளையாட்டுக்களின் போது சிறந்த அந்தஸ்தினை எய்தியுள்ள, விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களால் நியமனஞ் செய்யப்படும் ஐந்து உறுப்பினர்கள்.

II. தேசிய விளையாட்டுச் சபையின் பிரதிநிதியொருவர், மற்றும்

III. விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சின் பிரதிநிதியொருவர் என்போரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(இ). விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களால், தேசிய விளையாட்டுத் தேர்வாளர் குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

EOG 9-0297

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.